00024

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப்பரீட்சை

**EPD3234/ESD1134** – கலைத்திட்டக்கற்கைச் செயற்பாடும் சுகாதாரம், போசாக்கு, பாதுகாப்பு முறைமைகளும்

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 29.07.2023 நேரம்: மு.ப. 09.30 - மு.ப 11.30

- பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

1. முன்பள்ளி பிள்ளைகளின் உளச் சுகாதாரத்தில் தாக்கம் செலுத்தும் காரணிகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.
2. புரதச்சத்து நிறைந்த உணவுகளை கர்ப்பகாலத்தில் தாயொருவருக்கு வழங்குவதன் முக்கியத்துவம் யாது?
3. முன்பள்ளிப் பிள்ளைகளிடத்து அல்லூட்டத்தில் (Malnutrition) தாக்கம் செலுத்தும் காரணிகள் நான்கினைக் (04) குறிப்பிடுக.
4. செயற்படு நிர்ப்பீடனம் (Specific immunity) செயற்படா நிர்ப்பீடனம் (Non Specific Immunity) இடையேயான வேறுபாட்டை விளக்குக.
5. ஆரோக்கியமான வாழ்விற்கு ஊட்டச்சத்துள்ள உணவுமுறை (Nutritious Diet) ஏன் முக்கியமானது ஐந்து (05) காரணங்களை பட்டியலிடுக.
6. சமநிலை உணவு என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
7. அல்லூட்டம் (Malnutrition) எனும் பதத்தினை வரையறுக்குக.
8. நோயாளியொருவர் தனிமைப்படுத்தலின் போது நீர் கடைப்பிடிக்க வேண்டிய படிநிலைகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.

**(5 X 8= 40 புள்ளிகள்)**

## பகுதி - II

9.

**i.** "முதலுதவி" எனும் பதத்தினால் குறிப்பிடுவது யாது?

(04 புள்ளிகள்)

**ii.** அ) காயமொன்று (Wound) எப்படி நோய்த்தொற்றுக்குள்ளாகும்?

(02 புள்ளிகள்)

ஆ) முன்பள்ளி வகுப்பறையில் நோய்த்தொற்றுக்குள்ளான காயமுடைய பிள்ளையை எவ்வாறு அடையாளம் காண்பீர்கள் **நான்கு (04)** வழிகளினூடாக மேற்குறிப்பிட்டவற்றை சுருக்கமாக விபரிக்குக.

(04 **புள்ளிகள்**)

**iii.** முன்பள்ளி வகுப்பறையில் காயமடைந்த பிள்ளைக்கு முதலுதவி வழங்க நீங்கள் மேற்கொள்ளும் படிநிலைகளை சுருக்கமாக விளக்குக.

(10 **புள்ளிகள்**)

10.

**i.** நுளம்பினால் ஏற்படக்கூடிய நோய்த் தொற்றுக்கள் **நான்கினைக் (04)** குறிப்பிடுக.

(04 **புள்ளிகள்**)

**ii.** மேற்குறிப்பிட்டவற்றுள் **இரண்டு (02)** நோய்த் தொற்றுக்களைச் சுருக்கமாக விளக்குக.

(08 **புள்ளிகள்**)

**iii.** நுளம்பினால் உருவாகும் நோய்தொற்றுக்களை குறைப்பதற்கு நீர் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **நான்கினைச் (04)** சுருக்கமாக விளக்குக.

(08 **புள்ளிகள்**)

11.

**i.** "குழந்தைக்குச் சிறந்த உணவாக தாய்ப்பால் கருதப்படுகிறது" **நான்கு (04)** காரணங்களை குறிப்பிடுக

(04 **புள்ளிகள்**)

**ii.** முன்பள்ளி பிள்ளைகளுக்கு கவர்ச்சிகரமானதாகவும் ஆரோக்கியமானதாகவும் உணவு தயாரிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் **ஐந்தினைக் (05)** குறிப்படுக.

(05 **புள்ளிகள்**)

**iii. a)** 1 – 2 வயதுடைய பிள்ளைகளுக்கு வழங்க வேண்டிய **ஐந்து (05)** ஊட்டச்சத்துக்களைக் குறிப்பிடுக.

(03 **புள்ளிகள்**)

**b)** மேற்குறிப்பிட்ட ஊட்டச்சத்துக்களை உள்ளடக்கி நாளொன்றிற்கான உணவுப் பட்டியலைத் தயாரிக்குக.

(08 **புள்ளிகள்**)

12.

**i.** "போசணைக்குறைபாடு" என்றால் என்ன?

(04 **புள்ளிகள்**)

**ii.** முன்பள்ளி பிள்ளைகளிடம் காணக்கூடிய பொதுவான **நான்கு (04)** போசணைக் குறைபாடுகளை பட்டியற்படுத்துவதுடன், அவற்றில் **இரண்டினை (02)** விளக்குக.

(08 **புள்ளிகள்**)

**iii.** முன்பள்ளி பிள்ளைகளிடத்து குறைவாக உணவு உண்ணும் பழக்கமானது போசணைக் குறைபாட்டை விருத்தி செய்வதற்குரிய காரணியாக அமையும் அவ்வாறான பழக்கங்கள் **இரண்டினை (02)** விளக்குக.
(08 **புள்ளிகள்**)

13.

**i.** முன்பள்ளி பிள்ளைகளிடத்து விருத்தி செய்யப்பட வேண்டிய சுகாதார பழக்கங்கள் **ஐந்தினைக்** (05) குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

**ii.** முன்பள்ளிக்கு சிறந்த பாடசாலை சூழலை வழங்கும் போது பயன்படுத்த வேண்டிய **மூன்று** (03) பகுதிகளைக் குறிப்பிட்டு அவற்றில் **இரண்டினை** (02) விளக்குக.

(07 புள்ளிகள்)

**iii.** முன்பள்ளி குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வினை உறுதிப்படுத்த பெற்றோர்களிற்கு **இரண்டு** (02) பரப்புக்களில் அறிவுரை வழங்கப்படுவதாக இருப்பின் அவற்றை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*